**இலங்கை கால்பந்து சம்மேளனம் - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் (''சம்மேளனம்'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, திரண்ட நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியின் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் தவிர சம்மேளனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சம்மேளனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக கொள்வதற்காகவேயன்றி சம்மேளனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சம்மேளனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்;

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சம்மேளனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 உள்ளூராட்சி மன்றப் பகுதிகளில் விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்காக சம்மேளனம் 2005 தொடக்கம் 2007 ஆம் ஆண்டுகளில் அந்த உள்ளூராட்சி மன்றங்களுடன் புரிந்துணர்வு | பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் கணக்காய்வு அவதானிப்பின் தற்போதைய நிலைமை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதன் பிரகாரம், இலங்கை கால்பந்து சம்மேளனம் இவ்விடயம் தொடர்பாக | தவறுகளைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. மைதானத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் FIFA இனால் ரூபா 137,994,358 ஆன தொகை செலவிடப்பட்டு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் அக்கிரயம் தவறுதலாக 2009 ஆம் ஆண்டில் எவ்வித சட்டபூர்வ உரிமையும் இல்லாமல் சம்மேளனத்தின் குத்தகைச் சொத்துக்கள் மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் இக்கணக்கீட்டுத் தவறானது திருத்தப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வொன்றை மேற்கொள்வதற்கும் பிழைகளை சரி செய்வதற்கான சாத்தியமான தீர்வொன்றை வெளிப்படுத்துவதற்கும் 2021 ஒக்தோபர் 13 இல் "மூர் கன்சல்டிங் (பிறைவேட்) லிமிட்டட்" எனும் நிபுணத்துவ ஆலோசனை நிறுவனமொன்றை நியமித்துள்ளது. இலங்கை கால்பந்து சம்மேளனம் இப்பணியை முடித்து இச்சிக்கலை அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் அல்லது அதற்கு முன்னர் தீர்த்துக் கொள்வதற்கு விரும்புகின்றது.. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐந்து வருடங்களுக்கு மேலாக நிலுவையாகவுள்ள மொத்தம் ரூபா 11,581,538 ஆன ஆறு மிகுதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | இலங்கை காற்பந்து சம்மேளனத்தினால் நீண்டகாலமாக நிலுவையாகவுள்ள பெற வேண்டிய மிகுதிகளை பங்குதாரர்களிடமிருந்து அறவிடுவதற்கு / தீர்ப்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் 2021 திசெம்பர் 31 இற்கு முன்னர் இச்செயன்முறை முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. | நீண்டகாலம் பெற வேண்டிய மிகுதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 முற்பணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டு உட்பட 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விளையாட்டுப் போட்டி அமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களின் பெறுமதி ரூபா 609,898 ஆகும். இருந்த போதிலும், அம்முற்பணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் சம்மேளனத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வழங்கப்பட வேண்டிய உயர்ந்தபட்ச முற்பணத் தொகை நிர்மாணிக்கப்படாததுடன் குறித்த செயற்பாடுகள் முடிவடைந்து இருந்த போதிலும் முற்பணங்களைத் தீர்த்தல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச்சிக்கலைத் தீர்ப்பதற்கு காற்பந்து சம்மேளனம் உறுதிப்படுத்தும் ஆதாரங்களைச் சேகரிப்பதுடன் தகவல்களையும் திரட்டிக் கொண்டிருக்கின்றது. | மிகுதியாகவுள்ள பணிகள் முடிவடைந்தவுடன் உடனடியாக முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 171,793,729 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 205,053,615 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 39,289,886 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 44,458,528 ஆல் குறைவடைந்தமையே இப்பின்னடைவிற்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டில் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் சம்மேளனத்தின் முன்னாள் நிதி முகாமையாளரால் போட்டி நடுவர்களின் தவறான பெயர்கள் கொடுப்பனவு ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டு மோசடி முறையில் பணம் பெற்றுக் | பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் 2019 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அவதானிப்பின் தற்போதைய நிலைமை தொடர்பில் கலந்துரையாடப் | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொள்ளப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. இது தொடர்பாக தனியார் கணக்காய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடயவியல் கணக்காய்வின் பிரகாரம் மோசடி செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 48,388,399 ஆக இருந்தது. இருந்த போதிலும், 2021 நவம்பர் இறுதி வரையில் சம்மேளனம் இந் நட்டத்தை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | பட்டதன் பிரகாரம் 2020 செப்தெம்பர் 15 இல் வெளிப்படையாக மோசடி செய்யப்பட்ட ரூபா 48,388,399 ஆன பணத்தை அறவிடுவதற்காக முன்னாள் இலங்கை காற்பந்துச் சம்மேளனத் தலைவர் முன்னாள் நிதி முகாமையாளருக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார். இவ்விசாரணை இன்று வரை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டின்இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆகஸ்ட் 03 இல் பொது முயற்சிகள் தொடர்பான குழுவில் கலந்துரையாடப்பட்டதன் பிரகாரம், இலங்கை கால்பந்து சம்மேளனம் தற்போது எமது சொந்தப் பெறுகை திட்டத்தை உருவாக்கி வருகின்றது. இது 2022 இல் முழுமையாக செயற்படுத்தப்பட இருப்பதுடன் அதுவரைக்கும் தற்போதுள்ள பெறுகை நடைமுறைகள் தொடரப்படும். | தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |